
பக்கங்கள் 17+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 07 ஞாயிற்றுக்கிழமை 23.11.2025 | அதிர்வு 116

## மண்வெட்டியால் தாக்கப்பட்டு பெண்ணொருவர் கொடூரக் கொலை!



அம்பாறை மாவட்டம், பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹூலன்னுகே 12 ஆவது தூண் 02▸

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# திருடர்களின் இளவரசரே நாமல் எம்.பி.



## இப்படி விளாசித் தள்ளிய அநுர தரப்பு

**அரசுக்கு எதிராக நுகேகொடையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற பேரணியை “அலிபாபாவும் 400 திருடர்களும்” என்று தேசிய மக்கள் சக்தி தரப்பு கடுமையாக விமர்சித்துள்ளது. நாமல் ராஜபக்ஷ எம்.பியைத் திருடர்களின் இளவரசர் என்றும் அநுர தரப்பு விளாசித் தள்ளியுள்ளது.**

**கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ் வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் இந்த விமர்சனத்தை முன்வைத்துள்ளார்.**

இந்த நாடு வங்குரோத்து நிலை அடைந்ததற்கு மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பமே பதில் சொல்ல வேண்டும் என்று வலியுறுத்திய அவர், நுகேகொடையில் மேடையில் இருந்தவர்கள் அனைவரும் ஏற்கனவே சிறை சென்று வந்துள்ளவர்கள் என்றும், இன்று எல்லாத் திருடர்களும் ஒரே மேடையில் தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிராக அணிதிரண்டுள்ளனர் என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.



அத்துடன், ஹறின் பெர்னாண்டோ ஒரு காலத்தில் மஹிந்தவை ‘பகல் திருடன்’ என்று வர்ணித்த அதே வாயால், இன்று நாமல் ராஜபக்ஷவை ‘இளவரசர்’ என்று சொல்வதைச் சாடியுள்ள பிரதி அமைச்சர், நாமல் ராஜபக்ஷவை ‘திருட்டு இளவரசர்’ என்று மட்டுமே ஏற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

“மொட்டுக் கட்சி என்பது “இனவாதத்தின் சின்னம்” என்றும், இந்தத் திருட்டுக் கும்பல் மீண்டும் இனவாதத்தை உருவாக்கி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றப் பகல் கனவு காண்கின்றது.

ஆனால், இந்த நாட்டில் இருக்கின்ற அனைத்து மக்களும் புத்திஜீவிகளாகச் சிந்திக்கின்ற காரணத்தால், அந்தக் கட்சியால் இந்த முயற்சியில் ஒருபோதும் வெற்றி பெற முடியாது.” – என்றும் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

# சீரற்ற காலநிலையால் 9 பேர் சாவு!

## பத்து மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை மேலும் நீடிப்பு



இலங்கையில் நிலவும் சீரற்ற கால நிலையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நிலவும் கடும் மழையால் பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது என்றும், வீதிகளில் பாறைகள் 02▸

# வடக்கின் அபிவிருத்திக் கோரிக்கைகளை சாதகமாகவே பரிசீலித்து வரும் அநுர அரசு

## யாழ். நிகழ்வில் ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

"வடக்கின் அபிவிருத்தி சார்ந்து எம்மால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளைத் தற்போதைய அரசாங்கம் மிகவும் சாதகமாகவே பரிசீலித்து வருகின்றது. எனவே, இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி, விளையாட்டுத் துறைக்குத் தேவையான வளங்களைப் பெற்று, எமது வீரர்கள் சர்வதேச அரங்கில் மிளிர வேண்டும்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ள யாழ்ப்பாணம் மாவட்ட உள்ளக விளையாட்டு அரங்குக்கான அடிக்கல் நடும் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பழைய பூங்கா வளாகத்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரே வடக்கு மாகாணத்துக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டு, பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நான் யாழ். மாவட்ட செயலராகப் பணியாற்றிய காலத்திலிருந்தே, இந்த மாவட்டத்துக்கு ஓர் உள்ளக விளையாட்டு அரங்கு அமைய வேண்டும் எனப் பெரிதும் விரும்பினேன். அதற்காகப் பல தடவைகள் முயற்சிகளை மேற்கொண்ட போதும், அக்காலப்பகுதியில் அது கைகூடியிருக்கவில்லை. ஆனால், எனது அந்த நீண்டகாலக் கனவை இந்த அரசாங்கம் இன்று நிறைவேற்றியுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது." – என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, "யாழ். மாவட்டத்துக்கான இவ்வருட நிதி ஒதுக்கீட்டில் விளையாட்டுத்துறையின் மேம்பாட்டுக்காகவே அதிகளவாக 170 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இன்று அடிக்கல் நடுகை செய்யப்படும் இந்த உள்ளக விளையாட்டு அரங்கின் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு, 2026ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி விளையாட்டு வீரர்களிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படும்." – என்று உறுதியளித்தார்.







இந்நிகழ்வில் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சுனில் குமார கமகே, நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப் பாளர் சு.கபிலன் மற்றும் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள், வீரர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

---

### சீரற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விழுந்த சம்பவங்கள் பல பதிவாகியுள்ளன என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

இந்நிலையில், 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கைகள் மேலும் நீடிக்கப்பட்டுள்ளன என்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு, களுத்துறை, காலி, கண்டி, கேகாலை, மாத்தறை, இரத்தினபுரி, பதுளை, அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் உள்ள பல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கைகள் தொடர்ந்தும் அமுலில் இருக்கின்றது என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் கலாநிதி வசந்த சேனாதீர தெரிவித்தார்.

வளிமண்டல தளம்பல் நிலையினால் நாடு முழுவதிலும் பல நாட்களாக மழை பெய்து வருகின்றது. மாலை நேரங்களில் கடும் மழை தொடரும் என எதிர் பார்க்கப்படுகின்றது என்று வளிமண்ட லவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாகொடை பகுதி வழியாக வீசிய பலத்த காற்றினால் மாபலகம – காலி பிரதான வீதியில் மரங்கள் மின் கம்பிகளில் விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் கடும் மழையால் தெனியாய நகரின் பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு போக்குவரத்தை வழங்கப் பாதுகாப்புப் படையினர் உதவியுள்ளனர்.

உருபொக்கவின் பத்தன்வல பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் மாத்தறை – கொட்டபல வீதி முற்றிலும் தடைபட்டுள்ளது.

100 குடும்பங்களைச் சேர்ந்த 363 பேர் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாத்தறை மாவட்ட நிவாரண சேவைகள் மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்று சனிக்கிழமை இரவு உருபோகு ஓயா பெருக்கெடுத்தமையினால் கட்டுவன நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையால் களுத்துறை, புலத்சிங்களவில் உள்ள பல தாழ்வான பகுதிகள் மற்றும் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்று வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

### பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் மண்வெட்டியால் தாக்கப்பட்டுப் பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் 55 வயதுடைய பொத்துவில் – ஹூலன்னுகே பகுதியைச் சேர்ந்த பெண் என்று தெரியவந்துள்ளது.

தனிப்பட்ட தகராறின் காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய 59 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சடலம் ஹூலன்னுகே வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொத்துவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# தமிழ் வர்த்தகரின் உணவகமே கண்டி மண்சரிவில் சிக்கியது!

## அவரும், பிள்ளைகளும் உயிர்தப்பினர்; மனைவி, மாமனார் உட்பட அறுவர் பலி

கண்டி, பஹல கடுகண்ணாவ பகுதியில் நேற்று தமிழ் வர்த்தகர் ஒருவரின் உணவகமே மண்சரிவில் சிக்கியுள்ளது.

பஹல கடுகண்ணாவ பகுதியில் நேற்றுக் காலை வீட்டுடன் சேர்ந்த உணவகம் ஒன்றின் மீது பாரிய கற்கள் மற்றும் மண்மேடு சரிந்து வீழ்ந்த அனர்த்தத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நான்கு பேரின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என மாவனெல்ல மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்த அனைவரும் மாவனெல்ல ஆதார மருத்துவமனையின் 7ஆம் இலக்க விடுதியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மண்சரிவு ஏற்பட்ட போது காலை உணவுக்காக வந்த ஏழு பேர் உட்பட மொத்தம் 10 பேர் உணவகத்தில் இருந்துள்ளனர் எனப் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அனர்த்தம் ஏற்பட்ட போது உணவகத்தின் உரிமையாளர் அவசர தேவைக்காக வெளியில் சென்றிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த உணவகத்தின் உரிமையாளர் 40 வயதான குழந்தைவேல் ரகுநாதன் சசிதரன் ஆவார்.

இந்த அனர்த்தத்தில் அவரின் மனைவியான நிஷாந்தினி சசிதரன் (வயது 39) மற்றும் மனைவியின் தந்தை இராசலிங்கம் கருணாகரன் (வயது 66) ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

எனினும், வர்த்தக நிலையத்தின் உரிமையாளரும் அவரது இரண்டு பிள்ளைகளும் உயிர் தப்பித்துள்ளனர்.

மண்மேட்டுக்குள் சிக்கியவர்களை மீட்பதற்காகப் பொலிஸார், இராணுவத்தினர், தீயணைப்புப் படையினர் உள்ளிட்ட குழுவினர் பல மணிநேரம் மீட்பு நடவடிக்கையை மேற்கொண்டனர். இதன்போது இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த 4 பேர் காயங்களுடன் வெளியே கொண்டு வரப்பட்டு, பொலிஸாரால் 1990 சுவசெரிய அம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த மண்சரிவு அனர்த்தத்தில் உணவகத்தில் நேநீர் பருகிக் கொண்டிருந்த பேராதனைப்பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட விரிவுரையாளர் லஹிரு மதுசங்க சமரகோன் (வயது 31) என்பவரும் உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் விவரம்:-

01. இராசலிங்கம் கருணாகரன் (வயது 66, கடுகண்ணாவ)
02. நிஷாந்தினி சசிதரன் (வயது 39, கடுகண்ணாவ)
03. லிண்டன் ஜானக குமார ஜயசிங்க (வயது 60, கடுகண்ணாவ)
04. ருவன் குமார அபேசிறி சமரநாயக்க (வயது 43, எம்பிலிப்பிட்டிய)
05. குணரத்ன முதியன்சேலாகே புலஸ்தி பண்டார (வயது 33, கம்பளை)
06. லஹிரு மதுசங்க சமரகோன் (வயது 31, கல்அமுன)

காயமடைந்தவர்களின் விவரம்:-

01. உணவக ஊழியரான மீகாகெதர சம்பத் பண்டார ஜயரத்ன (வயது 44, வட்டப்பளை)
02. லஹிரு ருமேஷ் ரத்னாயக்க (வயது 33, பிலிமத்தலாவ)
03. ருசிர திலான் முனசிங்க (பிலிமத்தலாவ)
04. சந்திரிகா வசந்தி (வயது 56, ஹாலியத்த)




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதித்துறையில் தலையீடா?

ஜனநாயகத்தின் நான்கு தூண்களான சட்டமாக்கல் அதிகாரம் கொண்ட நாடாளுமன்றம், நிறைவேற்றதிகாரத்தை வைத்திருக்கும் ஜனாதிபதி, நீதித்துறை மற்றும் ஊடகத்துறை ஆகிய தரப்புகள் சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும், தனித்துவமாகவும், பிற தலையீடுகள் இன்றியும் இயங்க வேண்டும் என்பது முக்கியம். அப்படி இயங்கினால்தான் நாட்டில் ஜனநாயகமும் நீதியும் நியாயமும் நிலை நிறுத்தப்படும்.

மக்களின் நீதித்துறை இறைமையை சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நீதிமன்றங்களே பிரயோகிக்கின்றன. இந்த நீதிமன்றங்கள் வெளி அழுத்தங்களின்றி சுயாதீனமாகச் செயல்படுவது மிக முக்கியமாகும்.

இலங்கையில் நீதித்துறைச் சுதந்திரம் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளது என எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி இருக்கின்றன. இந்த அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்த பின்னர் நீதிபதிகளை நியமித்தல், நீக்குதல், இடமாற்றம் செய்தல், பதவி உயர்வு அளித்தல் ஆகியவற்றில் அரசியல் தலையீடுகள் அதிகரித்து உள்ளன என்று குற்றஞ்சாட்டும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், அது குறித்து விசாரணை செய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவு குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்று எழுத்து மூலம் சபாநாயகரைக் கோரியிருக்கின்றனர்.

சாணக்கியன் இராசமாணிக்கம், அர்ச்சுனா இராமநாதன் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன, தேசிய ஜனநாயக முன்னணி ஆகியவற்றைச் சேர்ந்த 22 எம்பிக்கள் இந்தக் கோரிக்கைக் கடிதத்தில் ஒப்பமிட்டுள்ளனர்.

அரசியல் செல்வாக்கு நீதித்துறைக்குள் முடிவுகளைப் பாதித்துள்ளது என்றும், பொலிஸ்மா அதிபரின் வேண்டுகோளின்பேரில் நீதிபதிகள் நீக்கப்பட்டனர் என வந்த செய்திகளை மேற்கோள் காட்டி, இது ஒரு முன்னோடியில்லாத அபத்தம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

“நீதித்துறை சுயாதினமாகச் செயற்பட வேண்டும். அது பொலிஸ் துறையின் ‘ரப்பர் ஸ்டாம்ப்’ அல்ல. மக்களின் இறையாண்மையைப் பாதுகாக்கும் மூன்று தூண்களில் இதுவும் ஒன்று” என்று எதிரணி எம்.பிக்கள் கூறினார்.

ஆகையால், நீதிச் சேவை ஆணைக் குழுவால் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்ட நீதித்துறை அதிகாரிகளின் நியமனங்கள், நீக்கங்கள், இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகளை மறுபரிசீலனை செய்ய ஒரு சிறப்பு நாடாளுமன்றக் குழுவை நிறுவக் கோரி சபாநாயகரிடம் ஒரு திட்டத்தைஅவர்கள்சமர்ப்பித்துள்ளனர்.

நீதித்துறை தரப்பினரை மட்டும் உள்ளடக்கிய நீதிச் சேவை ஆணைக் குழுவினால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை அரசியல்வாதிகளைக் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரித்து, கண்காணிப்புச் செய்வது கூட ஒரு வகையில் நீதித்துறையின் சுதந்திரம் மீதான அரசியல் தலையீடுதான் என்பதை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நீதித்துறையில் அரசியல் அல்லது பிற தலையீட்டைக் கட்டுப்படுத்தி, மட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்துவதற்கு அரசியல் துறை சாராத தரப்புகள் மூலம்தான் அதனை முன்னெடுக்க வேண்டும். நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் அல்ல.





# தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மாவீரர் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை ஏற்பாடு செய்த மாவீரர் வார நினைவேந்தல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் புகையிரத வீதியில் அமைந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை தலைவர் ப.குமார் தலைமையில் குறித்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது மாவீரர்கள் நினைவாக பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் சி. வி.கே.சிவஞானம், இலங்கை தமிழரசுக் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இலங்கை தமிழரசுக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

---





# "கண்குளிரும் மணவாழ்வு" நூல் வெளியீடு!

**(றிஸ்வான் சாலிஹூ)**

அக்கரைப்பற்று உதவிப் பிரதேச செயலாளர் ராஷித் யஹ்யா (நளீமி) எழுதிய "கண்குளிரும் மணவாழ்வு" விதியா? மதியா? திருமணத்திற்கு முந்தைய உளவியல் தொடர்பான குறிப்புகள் அடங்கிய நூல் வெளியீடு நேற்று சனிக்கிழமை அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் ஓய்வு நிலை விசேட தர இலங்கை நிர்வாக சேவை அதிகாரி எம். ஐ. அமீர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரமவும், கௌரவ அதிதியாக அக்கரைப்பற்று மாநகர முதல்வரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லாவும் கலந்து கொண்டனர்.

விசேட பேச்சாளராக இலங்கை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் முதல்வரும், நாடறிந்த பேச்சாளருமான அஷ்ஷேக். ஏ. சீ. அகார் முஹம்மத் கலந்து கொண்டு இந்த நூல் தொடர்பான சாதகங்களையும் இதன் தேவைப்பாடுகளையும் பற்றி விசேட உரையாற்றினார். நூலின் ஆய்வுரையை தென் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் எம். அப்துல் ரஸாக் வழங்கினார்.

வெறுமனே திருமண பந்தத்தில் இணைய இருப்பவர்களுக்கான வழிகாட்டல்கள் மாத்திரமன்றி குழந்தை வளர்ப்பு, சிறார்களின் உரிமைகள், பெற்றோர் – பிள்ளை உறவு முதலான குடும்ப வாழ்க்கையுடன் தொடர்பான மற்றும் ஏனைய பல அம்சங்களையும் இந்த நூலிலுள்ள ஆக்கங்கள் பேசுகின்றன என்று நூலாசிரியரும், அக்கரைப்பற்று உதவிப்பிரதேச செயலாளருமான ராஷித் யஹ்யா தனது ஏற்புரையில் தெரிவித்தார்.





### இலங்கையர் தினத்தில்

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்து நல்லிணக்கத்தை வெளிப்படுத்துங்கள்!

### ஜனாதிபதியிடம் வலியுறுத்திய ரவிகரன் எம்.பி.

**(விஜயரத்தினம் சரவணன்)**

ஆனந்தசுதாகர் உள்ளிட்ட சிறையிலுள்ள 10 தமிழ் அரசியல் கைதிகளையும் அடுத்தமாதம் இடம்பெறவுள்ள இலங்கையர் தினத்துடன் விடுவிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களுடைய வலியுறுத்தலையடுத்து, தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்புச் செய்வது தொடர்பில் தாம் பரிசீலணை செய்வார் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் அரசால் மேற்கொள்ளப்படவுள்ள இலங்கையர் தினம் தொடர்பில் தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவூட்டும் மற்றும் கருத்தறியும் கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போதே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

எதிர்வரும் டிசெம்பர் மாதம் அரசால் மேற்கொள்ளப்படவுள்ள இலங்கையர் தினம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.



இதன்போது இலங்கையர் தினத்தை மேற்கொள்ளவுள்ள உரிய அமைச்சினுடைய அதிகாரிகளால் குறித்த இலங்கையர்தினம் தொடர்பில் தெளிவூட்டப்பட்டது. குறித்த இலங்கையர் தினம் தொடர்பில் குறித்த கலந்துரையாடலில் பங்கேற்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து கருத்துக்களும் கேட்டறியப்பட்டன.

இதன்போது எனக்குரிய கருத்துத் தெரிவிக்கும் சந்தர்ப்பத்தில் சிறைகளில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் கூடுதல் கவனம்செலுத்தி அவர்களை விடுதலைசெய்யுமாறு வலியுறுத்தியிருந்தேன்.

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சிக்கும், ஜனாதிபதிக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பிலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்புத் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைகள் கோரிக்கை முன்வைத்திருந்தமையையும் இதன் போது ஜனாதிபதிக்கு நினைவூட்டியிருந்தேன்.

அத்தோடு தமிழ் அரசியல் கைதிகளில் ஒருவரான கிளிநொச்சி மருதநகரைச் சேர்ந்த ஆனந்தசுதாகருடைய மனைவி ஏற்கனவே இறந்துள்ள நிலையில், அவருடைய இரண்டு பிள்ளைகளையும் பராமரித்துவந்த அந்த பிள்ளைகளின் அம்மம்மாவும் உயிரிழந்துள்ளார் என்பதையும், ஆனந்தசுதாகரின் பிள்ளைகள் நிர்க்கதியாகியுள்ளனர் என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

எனவே, இதேபோலவே ஒவ்வாரு தமிழ் அரசியல் கைதிகளுடைய குடும்பங்களும் ஏதோ ஒருவிதத்தில் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்பதையும் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தேன்.

எனவே இந்த விடயத்தில் மனிதாபிமானத்துடன் அணுகி, எதிர்வரும் டிசெம்பர்மாதம் இடம்பெறவுள்ள இலங்கையர் தினத்திலாவது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை உறுதி செய்து நல்லிணக்கத்தை வெளிப்படுத்துமாறும் வலியுறுத்தியிருந்தேன்.

இந்த நிலையில் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களதும் கருத்துக்களைச் செவிமடுத்த பிறனர் ஜனாதிபதி பதிலளிக்கும்போது, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தாம் பிரிசீலணை செய்வார் என்று தெரிவித்திருந்தார். - என்றார்.

---







# தாண்டியடி விளையாட்டு மைதானத்தில் இம்முறை மாவீரர் தின நிகழ்வு ஏற்பாடு!

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு வவுணதீவு தாண்டியடி மாவீரர் துயிலுமில்ல மாவீரர் தின ஏற்பாடுகள் தாண்டியடி விளையாட்டு மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தாண்டியடி துயிலுமில்லம் அமைந்துள்ள பூமியில் விசேட அதிரடிப்படை முகாம் இருப்பதன் காரணமாக இதுவரை காலமும் தாண்டியடி முருகன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள வளாகத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெற்று வந்தன.

இந்தப் பகுதி மிகவும் நெருக்கமாக உள்ளதல் தாண்டியடி விளையாட்டு மைதானத்தில் குறித்த நிகழ்வை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

# கிராமங்களைப் பாதுகாக்க துப்பாக்கி வழங்குங்கள்!

## செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் நிலாந்தன் தெரிவிப்பு

(பழுவூரான்)

குரங்குகளிடம் இருந்து மக்களையும், கிராமங்களையும் பாதுகாப்பதற்கு பிரதேச சபை உறுப்பினர்களுக்கு காற்றமுத்த துப்பாக்கி வழங்குமாறு செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஏறாவூர் பற்று பிரதேச சபையின் ஆறாவது அமர்வில் செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் நிலாந்தனால் இந்தக் கோரிக்கை அடங்கிய பிரேரணை முன்வைக்கப்பட்டது.

குரங்குகளிடம் இருந்து மக்களையும் சொத்துக்களையும் பாதுகாப்பது மற்றும் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட பிரேரணையை முன் வைத்து சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது,

இலங்கை முழுவதும் இன்று குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. குரங்குகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்றத்தில் பல விவாதங்கள் நடைபெற்றன. ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எமது ஏறாவூர் பற்று பிரதேச சபை பிரிவில் தற்போது வரை குரங்குகளின் அட்டகாசம் தொடர்ந்து கொண்டேயுள்ளது.

நகர் பகுதிகளுக்குள் படையெடுக்கும் குரங்குகள் வீடுகளுக்குள் நுழைந்து பெறுமதியான பொருள்களை அழிக்கின்றன, மின் குமிழ்களைத் திருடிச் செல்கின்றன, சி. சி. டிவி கேமராக்களை உடைக்கின்றன, பிரதேச சபையால்



போடப்பட்ட மின் குமிழ்களை எடுத்துச் செல்கின்றன, தொலைத் தொடர்பு இணைப்புக்களைத் துண்டிக்கின்றன. பயன் தரும் மா, தென்னை மரங்களை அழிக்கின்றன. இதனால் பல ஆயிரக் கணக்கான சொத்தழிவுகள் ஏற்படுகிறது.

அத்தோடு பல கிராமங்களில் பொது மக்களைக் குரங்குகள் கடித்துள்ளன. குரங்கு கடியால் பலர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுள்ளனர். இந்த நிலையைக் கருத்தில் கொண்டு பொறுப்பு வாய்ந்த பிரதேச சபை என்ற வகையில் குரங்குகளிடம் இருந்து மக்களையும் சொத்துக்களையும் பாதுகாப்பது எமது கடமையாக உள்ளது.

குரங்குகளைகட்டுப்படுத்துவதற்கான வழிகளை நாம் கண்டறிய வேண்டும். என்னை பொறுத்தவரை காற்றமுத்த துப்பாக்கிகளை வழங்கினால் அதன் மூலம் குரங்குகளைத் துரத்தியடிக்க முடியும்.

குரங்குகளுக்கு காயமோ, உயிர் ஆபத்துக்களோ ஏற்படாத வகையில் அவற்றை துரத்த முடியும். பிரதே சபைத் தவிசாளர் உரிய திணைக்களங்களோடு பேசி காற்றமுத்த துப்பாக்கிகளைப் பெற்று குரங்குகளை துரத்தியடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லை என்றால் வட்டார உறுப்பினர்களுக்கு காற்றமுத்த துப்பாக்கிகளைப் பெற்று தந்தால் அவர்களது கிராமங்களுக்கு வரும் குரங்குகளை அவர்கள் துரத்தியடிக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

இதேபோல் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகளும் அதிகரித்துள்ளன. வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் முறையான பராமரிப்பு இல்லாததால் வீதிகளில் சுற்றித் திரிகின்றன. அதே போல் கட்டாக் காலி நாய்களின் இனப் பெருக்கம் அதிகரித்துள்ளது. நகர் பகுதிகளில், சந்தைகளில் கூடுதலான நாய்கள் சுற்றி திரிகின்றன. பல நாய்கள் நோய்த் தாக்கத்தோடு சுற்றித் திரிகின்றன.

இதனால் வீதிகளில் விபத்துக்கள் ஏற்படுகின்றன. விசர் நாய் கடி அதிகரிக்கிறது, சுகாதார பிரச்சினைகள், பாதுகாப்பு பிரச்சினை ஏற்படுகின்றன. எனவே நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் பேசி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கட்டாக்காலியாக சுற்றி திரியும் நாய்களை பிடித்து நாய்கள் காப்பகத்தில் ஒப்படைக்க வேண்டும். எதிர் காலத்தில் ஏறாவூர் பற்று பிரதேச சபை பிரிவில் சுற்றி திரியும் கட்டாக்காலி நாய்களை பராமரிக்க நாய்கள் காப்பகம் அமைக்க பிரதேச சபை ஊடாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.– என்றார்.





# வடிகான் துப்புரவு பணியில் மாநகர சபை ஊழியர்கள்!

(றிபாஸ்)

அக்கரைப்பற்று மாநகர சபைக்கு உட்பட்ட சகல சுற்று வட்டாரத்திலும் உள்ள வடிகான் சுத்திகரிப்பு பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் ஏ.எல்.எம். அதாவுல்லாவின் வேண்டுகோளுக்கமைய பிரதி முதல்வர் யூ.எல். உவைஸின் மேற்பார்வையின் கீழ் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழையால் அதிகமான வடிகான்களில் நீர் வடிந்தோட முடியாமல் தேங்கி நிற்பதுடன், குப்பைகளும், கழிவுப் பொருள்களும் நிறைந்து காணப்படுகின்றன.அக்கரைப்பற்று பிரதேசத்தின் பிரதான வீதி, குறுக்கு வீதிகள், அஸ்ஸிறாஜ் வீதி, வட்டானை வீதி போன்ற வீதிகளை தொடராக சுத்தம் செய்யும் பணியில் மாநகர சபை ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.




# கார்த்திகை வாசம் மலர்க் கண்காட்சியில் 'கார்த்திகை மலரே' இசைப்பாடல் வெளியீடு!

நல்லூர் கிட்டு பூங்காவில் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டுத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஏற்பாடு செய்துள்ள 'கார்த்திகை வாசம்' மலர்க் கண்காட்சியில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'கார்த்திகை மலரே!' என்ற இசைப்பாடல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் இசைப் பாடலை வெளியீடு செய்ய சிரேஷ்ட இசையமைப்பாளர் க. சத்தியன் பெற்றுக் கொண்டார்.

தமிழகத்தின் பாடலாசிரியர் யுகபாரதி எழுதிய "கார்த்திகை மலரே! மலர்வாயா? எங்கள் காத்திருப்பை நீ அறிவாயா?, கல்லறை சேர்ந்த ஈகியர்கள் கண்ட கன வினைக் கண்ணில் தருவாயா?" என்று தொடங்கும் பாடலை, ஈழத்தின் பாடகி ஜெயபாரதி பாடியுள்ளார். பூவன் மதீசன் இசையில் உருவான இப்பாடலின் ஒலிப் பதிவை மதி மனு மேற்கொண்டுள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தயாரிப்பான கார்த்திகை மலரே என்ற இந்த இசைப்பாடலை பாடல் வரிகளில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளாமல் எவரும் பயன்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கள்ள மாடு அறுத்தோர் இறைச்சியை வீதியில் போட்டுவிட்டுத் தப்பியோட்டம்!





(எஸ்.கீதபொன்கலன்)

கள்ள மாடு அறுத்த இருவர் அனைத்தையும் கைவிட்டுவிட்டு தப்பியோடியுள்ளனர்.

திருகோணமலை சிவன் கோவிலுக்குப் பின்னால் உள்ள மரம் ஒன்றில் நேற்று முன்தினம் நள்ளிரவு களவெடுத்த மாடு ஒன்றை கட்டி சிலர் அறுத்துள்ளனர்.

அறுத்த இறைச்சியை நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இருவர் வீதியால் கொண்டு சென்றபோது இளைஞர் ஒருவர் கண்டு துரத்தியுள்ளார்.

அப்போது சந்தேகநபர்கள் அறுத்த இறைச்சி மற்றும் அதற்கு பயன்படுத்திய கோடரி கத்தி என்பவற்றை கைவிட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிய வருகிறது.

மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சிதைவுகளைச் சுமந்த நட்சத்திரத்தின் மௌனக் காவியம்!



நா.உசாந்தினி,
3 ஆம் வருடம்,
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

நினைவுகளைச் சுமந்து நிற்கும் யாழ்ப்பாணக் கோட்டையானது காலப் பயண வரலாற்றின் தடயங்களைச் சுமந்த மண்ணில் காலடி எடுத்து வைப்பது எப்போதுமே ஓர் உணர்வு பூர்வமான அனுபவம்தான். அப்படிப்பட்ட ஒரு பயணம்தான், இலங்கையின் வடக்கே, யாழ்ப்பாணக் கடல்நீரேரியை ஒட்டி கம்பீரமாய் நிற்கும் யாழ்ப்பாணக் கோட்டைக்கு நான் மேற்கொண்ட பயணம்.

வட இலங்கையில் ஐரோப்பிய ஆதிக்கத்தின் அடையாளமாக சுமார் 400 ஆண்டுகால தனித்துவத்தைக் கொண்ட இந்தக் கோட்டை, நாட்டின் இரண்டாவது பெரிய கோட்டையாகக் கூறப்படுகிறது. இதன் ஒவ்வொரு கல்லிலும், சிதைந்த சுவரிலும் ஒரு யுகத்தின் கதை புதைந்து கிடக்கின்றது.

## அமைப்பு

சுமார் 62 ஏக்கர் பரப்பில் அமைந்திருந்த இந்தக் கோட்டையின் வெளிப்புறச் சுவர்கள் 40 அடி அகலமும், 30 அடி உயரமும் கொண்டவை. கோட்டையைச் சுற்றி, எதிரிப் படையெடுப்பைத் தடுக்கும் வகையில் ஆழமான அகழிகள் காணப்படுகின்றன. ஒல்லாந்தர் காலத்தில் இது ஆளுநர் மாளிகை ராணி மாளிகை, கிறிஸ்தவ ஆலயம், மருத்துவமனை, சிறைச்சாலை, படைவீரர்களின் குடியிருப்புகள் போன்ற நிர்வாக மற்றும் இராணுவ மையங்களைக் கொண்ட ஒரு சிறிய நகரமாகவே திகழ்ந்தது.

## வரலாற்றின் தொன்மை

கோட்டையின் ஆரம்பம் கி.பி. 1619 இல் போர்த்துக்கேயரால், ஒரு நாற்பக்க வடிவிலான சிறிய கோட்டையாகக் கட்டப்பட்டது. ஆனால், இன்று நாம் பார்க்கும் நட்சத்திர வடிவிலான பிரம்மாண்டமான கோட்டையின் தோற்றம், அதன் பின்னர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய ஒல்லாந்தரின் (டச்சுக்காரர்) கைவண்ணம் என கூறப்படுகின்றது.

## வடிவமைப்பு

யாழ்ப்பாணக் கோட்டையானது, 17 ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தர் (டச்சுக்காரர்) மற்றும் ஐரோப்பியப் படையினரால் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட மிக நுட்பமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானக் கலையின் அடிப்படையில் கட்டப்பட்டது. இந்தக் கோட்டையின் வடிவமைப்பு உலகளவில் “நட்சத்திரக் கோட்டை” அல்லது “ஐங்கோணக் கோட்டைக் கலை” என அழைக்கப்படுகிறது. இந்தக் கோட்டையின் கட்டுமானத்துக்கு அடிப்படையான இந்த வடிவம், வெளிப்புறத் தாக்குதல்களுக்கு எதிராக அதிகபட்ச பாதுகாப்பை வழங்குகிறது.

இலங்கையில் ஒல்லாந்தரால் கட்டப்பட்ட பல கோட்டைகளில் இது தனித்துவம் வாய்ந்தவை எனலாம். குறிப்பாக காலி கோட்டை போன்ற ஏனையவை சதுர அல்லது செவ்வக வடிவில் இருந்தாலும், யாழ்ப்பாணக் கோட்டை மட்டுமே இந்த நட்சத்திர வடிவத்தின் பிரம்மாண்டத்தைக் கொண்டுள்ளது. மேலும் இந்த நட்சத்திர வடிவத்தின் மையப் பாதுகாப்பு அதன் கொத்தளங்கள் ஆகும். கொத்தளம் என்பது கோட்டையின் மூலையில் இருந்து கூர்மையாக வெளிப்புறமாக நீட்டிக் கொண்டிருக்கும் வலுவான கட்டுமானப் பகுதி. ஒரு கொத்தளம் கூர்மையான முனையுடன் கூடிய இரண்டு முகங்கள் மற்றும் இரண்டு மறைவுப் பக்கங்களைக் கொண்டு காணப்படும். இதன் சிறப்பம்சம் என்று நோக்குகின்ற போது பாரம்பரிய சதுரக் கோட்டைகளில், மூலைகளில் இருந்து சுவர்களின் நடுப்பகுதியைப் பாதுகாக்க முடியாது. ஆனால், நட்சத்திரக் கோட்டைகளில், ஒரு கொத்தளத்தின் மறைவுப் பக்கத்தில் இருந்து சுடப்படும் பீரங்கி அல்லது துப்பாக்கிச் சூடு, அருகில் உள்ள மற்றொரு கொத்தளத்திற்கும் அதன் சுவருக்கும் இடையில் தாக்குதல் நடத்தும் எதிரிகளைக் குறிவைக்க முடியும். இதை தடுப்புச் சூடு என்பர். இதனால், கோட்டையின் எந்தவொரு பகுதியும் பாதுகாப்பற்றதாக இருக்க வாய்ப்பில்லை.

கோட்டையைச் சுற்றி ஆழமான மற்றும் அகலமான அகழிகள் வெட்டப்பட்டன. இது எதிரிகள் சுவர்களை அணுகுவதைத் தடுக்க நீர் நிரப்பப்பட்டு ஒரு முதல்நிலை தடையாகச் செயல்பட்டது. மேலும் முக்கிய நுழைவாயிலைப் பாதுகாப்புக்காக, நீர் நிறைந்த அகழிகள் வழியாகச் செல்லக்கூடிய Drawbridge பயன்படுத்தப்பட்டது. இந்த ஐங்கோண நட்சத்திர வடிவம், பீரங்கிப் போரின் வளர்ச்சிக்கு பதிலளிக்கும் விதமாக ஐரோப்பாவில் உருவாக்கப்பட்டது. குண்டுகள் வீசப்பட்

தொடர்ச்சி▼

# சிதைவுகளைச் சுமந்த நட்சத்திரத்தின் மௌனக் காவியம்!

தொடர்ச்சி▲

டாலும், கூர்மையான கோணங்களில் அமைந்த சுவர்கள் தாக்கத்தின் வீரியத்தைக் குறைத்து, கோட்டையைப் பாதுகாக்க உதவின. இந்த வடிவமைப்பு, யாழ்ப்பாணக் கோட்டையை ஒரு வரலாற்றுச் சின்னமாக மட்டுமன்றி, 17 ஆம் நூற்றாண்டின் இராணுவப் பொறியியல் மற்றும் கட்டடக் கலையின் மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகவும் நிலைநிறுத்துகிறது எனலாம்.

### சிதைவுகளும் புனர்நிர்மாணமும்

ஆங்கிலேயரின் கைக்கு மாறிய பின்னர் சுதந்திர இலங்கையின் இராணுவத் தளமாக இருந்த இந்தக் கோட்டை, 1980 கள் மற்றும் 90களின் உள்நாட்டுப் போரின்போது பலத்த சேதத்துக்கு உள்ளானது. ஒரு காலத்தில் கம்பீரமாகக் காட்சியளித்த பல கட்டடங்கள் இன்று சிதைந்த இடிபாடுகளாகவே நிற்கின்றன. போரின் வடுக்களைச் சுமந்திருந்தாலும், நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடன் இந்தக் கோட்டையைப் புனர்நிர்மாணம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இச்சீர்திருத்தப் பணிகள், கோட்டையை மீண்டும் ஒரு வரலாற்றுச் சுற்றுலா மையமாக மாற்றும் நோக்குடன் மேற்கொள்ளப்படுகின்றது.

### சுற்றுலா அனுபவம்

யாழ்ப்பாணக் கோட்டையைப் பார்வையிட்ட ஒருவருக்குக் கிடைக்கும் அனுபவம் என்று நோக்குகின்ற போது சிதைவுகளால் நிறைந்த யாழ்ப்பாணக் கோட்டைக்குச் செல்வது என்பது வெறும் ஒரு சுற்றுலாத் தலத்தைப் பார்ப்பது மட்டுமல்ல அது ஒரு மௌனமான வரலாறுக்குள் பயணிப்பது போன்றது. இந்தக் கோட்டை, காலனித்துவ ஆதிக்கத்தின் பிரம்மாண்டத்தையும், உள்நாட்டுப் போரின் வடுக்களையும், மீண்டும் புத்துயிர் பெறும் நம்பிக்கையையும் ஒரே இடத்தில் காட்சிப்படுத்துகிறது என்றால் மிகையாகாது.

வரலாற்று நுழைவாயிலின் உணர்வு கோட்டைக்குள் நுழையும் போதே, கண்களைக் கவரும் பிரம்மாண்டமான நுழைவாயில் காணப்படுகின்றது. பல நூற்றாண்டுகளாகப் பல ஆட்சியாளர்களின் அதிகார மையமாக இருந்த ஒரு பகுதிக்குள் நாம் நுழைகிறோம் என்ற உணர்வு இங்கு மேலோங்குகின்றது. Drawbridge இன் எச்சங்கள் மற்றும் அகழியைச் சுற்றியுள்ள அமைப்புகள், ஒரு காலத்தில் இது எவ்வளவு பாதுகாப்பான மற்றும் வலிமையான இடமாக இருந்தது என்பதைப் புரியவைக்கின்றது எமக்கு.

கொத்தளங்களின் மீதான நடை கோட்டையின் மிகச் சிறந்த அனுபவங்களில் ஒன்று. அதன் சுவர்கள் மீதும், கொத்தளங்கள் மீதும் ஏறி நடப்பதுதான் சிறப்பே. குறிப்பாக சுமார் 30 அடி உயரமும், 40 அடி அகலமும் கொண்ட இந்தச் சுவர்களின்மீது ஏறிச் செல்லும்போது, அந்த ஒல்லாந்தர் காலக் கட்டுமானத்தின் வலிமையை உணரலாம். சுவர்களின் மீது அமர்ந்து அல்லது நடந்து செல்லும்போது, அவை சலசலக்கும் காற்றையும், கடந்த காலத்தின் கதைகளையும் சுமந்து நிற்பதாக மனதில் தோன்றும்.

கோட்டையின் உச்சியில் இருந்து, சுற்றியுள்ள இயற்கை காட்சியை அவதானிக்கும் போது ஒருபுறம் அமைதியான யாழ்ப்பாணக் கடல்நீரேரியின் நீலப் பரப்பு கண்ணுக்கு விருந்தளிக்கும். மறுபுறம், யாழ்ப்பாண நகரத்தின் மரங்கள் மற்றும் கூரைகளின் காட்சி தெரியும். ஒரு காலத்தில் இந்த இடத்தில் நின்றுதான் பீரங்கிகள் மூலம் பாதுகாப்பை உறுதி செய்திருப்பார்கள் என்ற எண்ணம் என் மனதில் எழுந்தது.

சிதைந்த கட்டடங்களின் மௌனம் என் மனதிலும் மௌனத்தை ஏற்படுத்தியது. கோட்டையின் உட்பகுதி இன்றும் பெரும்பாலும் சிதைந்த இடிபாடுகளின் தொகுப்பாகவே காணப்படுகிறது. இங்குள்ள இடிபாடுகளை பார்க்கும்போது ஒரு காலத்தில் செயல்பாட்டில் இருந்த மையத்தின் மௌனம் நம்மைச் சூழ்ந்துகொள்கின்றது.

ராணி மாளிகை (Queen's u;ouse) & ஆளுநர் மாளிகை (King's House) பார்க்கின்ற போது, இந்த மாளிகைகளின் சிதைந்த அடித்தளங்களும், நிற்கும் சுவர்களின் எச்சங்களும் ஒரு காலத்தில் இங்கு நடந்த அரச நிர்வாகத்தின் அதிகாரத்தைக் குறிக்கின்றன. கிரேக்கச் சிலுவை வடிவ தேவாலயம் இடிபாடுகளுக்கு மத்தியில் இருக்கும் இந்த ஒல்லாந்தர் கால தேவாலயத்தின் சிதைந்த சுவர்களும், தரைத் தளமும், ஒரு காலத்தில் இங்கு நடைபெற்ற வழிபாடுகளின் அமைதியைக் எமக்கு எடுத்தியம்புகின்றன. இங்குள்ள ஒவ்வொரு கல்லும், அது தாங்கி நின்ற வரலாற்றின் வலியைப் பேசுகிறது. நிர்வாக மையங்கள், மருத்துவமனை, சிறைச்சாலை போன்ற கட்டடங்களின் இடிபாடுகளைப் பார்க்கும் போது , இது வெறும் இராணுவத் தளம் அல்ல, ஒரு முழுமையான சமூக அமைப்பு என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

சூரிய அஸ்தமனம் யாழ்ப்பாணக் கோட்டைக்குப் புத்துயிர் கொடுக்கின்றது. குறிப்பாக யாழ்ப்பாணக் கோட்டையைப் பார்வையிடச் சிறந்த நேரம் மாலைப் பொழுதாகும். மறையும் சூரியனின் செந்நிறக் கதிர்கள், கோட்டையின் கற்கள் மற்றும் சிதைந்த சுவர்களின்மீது படும்போது, அது புகைப்படக் கலைஞர்களுக்கு ஒரு அற்புதமான பின்னணியை வழங்குகிறது. கோட்டையின் சுவரில் அமர்ந்து கடல்நீரேரியின் மீது சூரியன் மறையும் காட்சியைப் பார்ப்பது மனதிற்கு அமைதியையும், ஒருவித சிந்தனைத் தெளிவையும் தருகின்றது. பல போர்களையும் கால மாற்றங்களையும் கண்ட ஒரு நினைவுச் சின்னத்தின் முன் நாம் நிற்கிறோம் என்ற உணர்வு ஆழமாகப் பதியும். சுருக்கமாகச் சொன்னால், யாழ்ப்பாணக் கோட்டைப் பயணம் என்பது, அதன் அமைதியான சிதைவுகளுக்குள் காலனித்துவ வரலாறு, போரின் சோகம் மற்றும் வடக்கின் கலாச்சாரத் தாக்கம் ஆகியவற்றை ஒருங்கே காணும் ஒரு வரலாற்று உலா ஆகும்.

இடிந்த தேவாலயம், மாளிகையின் சிதைந்த சுவடுகள், பழைய சிறைச்சாலையின் எச்சங்கள் போன்றவற்றைச் சுற்றிப் பார்க்கும் போது, அங்கு வாழ்ந்தவர்களின் வரலாறும், அவர்களின் அன்றாட வாழ்க்கையும் ஒரு கணம் கண் முன் வந்து போகும். வரலாற்றை நேசிப்பவர்களுக்கும், கட்டடக் கலையின் நுணுக்கங்களை ரசிப்பவர்களுக்கும் யாழ்ப்பாணக் கோட்டை ஒரு பொக்கிஷம். இந்தக் கோட்டையின் ஒவ்வொரு மூலையும், அது கடந்து வந்த காலத்தின் கதைகளை மௌனமாகக் கூறிக்கொண்டுதான் இருக்கின்றன. நீங்கள் யாழ்ப்பாணம் சென்றால், இந்தக் கோட்டையின் அழகையும், அதன் வரலாற்றின் வலிமையையும் ஒருமுறை பார்த்து அனுபவிக்கத் தவறாதீர்கள்.



# பகிடிவதையற்ற பல்கலைக்கழகம்!

## ஒரு கனவு

கல்வி என்பது அறிவை மட்டும் அல்ல மனித நேயத்தையும் உருவாக்கும் ஒரு அரிய சாதனமாகும் என்று கூறுவார்கள். ஆனால் எமது நாட்டில் நடைபெறும் சம்பவங்களைப் பார்த்தால் இக்கூற்றானது சரிதானா என்ற கேள்வியானது எனக்குள்ளே உருவாகிறது.

சற்றுச் சிந்தித்துப் பார்ப்போம். அறிவில்லாத அழகு இருண்ட வீட்டில் விளக்கு இல்லாதது போன்றது. ஒரு மரத்தை நிழலுக்காக வளர்த்தால் ஒரு தலைமுறை நன்றி கூறும். இதுவே ஒருவனுக்குக் கல்வியைக் கொடுத்தால் அது பல தலைமுறைகளைக் கடந்து நன்றி கூறும். ஒரு மாணவன் அல்லது மாணவி தனது பாடசாலை காலத்தை முடித்துவிட்டு தனது வாழ்வின் புதிய தொடக்கமான பல்கலைக்கழக கல்விக்கான கதவைப் பல கனவுகளுடனும் எதிர்பார்ப்புக்களுடனும் தொடங்குகின்றார்கள். ஆனால் அந்தப் பயணத்தில் எம்மில் எல்லோருக்குமே அவை மகிழ்ச்சியான முடிவைத் தான் தருகின்றனவா என்றால் அது சந்தேகத்துக்குரியதே? காரணம் புதுமுகமானவர்கள் எதிர்நோக்குகின்ற பகிடிவதையே.

இங்கு வேடிக்கையான விடயம் என்னவென்றால் நாளைய இளைய தலைமுறையினராக நாட்டை ஆளப் போகும் பட்டதாரிகள் மத்தியிலேயே இவ்வாறான நடத்தைகள் காணப்படுவது கவலைக்குரிய விடயமாகும். ஒவ்வொரு சமூகங்களில் இருந்தும் பல்கலைக்கழகத்துக்கு வருபவர்கள் அனைவருமே ஒரே மாதிரியான நிலையில் இருக்க மாட்டார்கள். அவர்களின் குடும்பம், பொருளாதாரம், கடமைகள் என்று அவர்களுக்கு என ஒவ்வொரு பொறுப்புக்கள் உண்டு.



ஜெகன் ஹிமாத்ரி,
ஊடகக்கற்கைகள் துறை,
மூன்றாம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

12 , 13 வருடங்கள் கல்வி கற்று பல்கலைக்கழகம் சென்று தனக்கென ஒரு வேலையை பெற்று தன் குடும்பத்தைப் பார்க்க வேண்டிய பொறுப்பைச் சுமந்து கொண்டு எத்தனையோ மாணவர்கள் உள்ளனர். ஆனால் பல்கலைக்கழகங்களில் பாரம்பரிய சொல்லாகக் காணப்படும் பகிடிவதை என்பது அத்துமீறி எத்தனை உயிர்களை இழந்து உள்ளோம் என்பது நம் அனைவருக்கும் தெரிந்த விடயம்தான். புதுமுக மாணவர்களுக்கும் சிரேஷ்ட மானவர்களுக்கும் இடையேயான நட்பை உருவாக்குவதாகவே வெளிப்புறத் தோற்றத்தில் இச்சொல்லானது வெறும் கானல் நீராக கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் அங்கு பகிடிவதை எனும் பெயரில் நடப்பது தான் என்ன. உயிரினை காவு கொள்ளும் அளவிற்கு செல்லத் தானா வேண்டும் ? இதனால் யாருக்கு என்ன பயன் ? என எண்ணுள்ளே பல கேள்விகள் எழுந்து கொண்டே தான் இருக்கின்றன. புதிய வாழ்க்கையை தொடங்கிய மாணவர்களின் கனவுகளை மற்றொருவர் சிதைப்பது என்பது நாகரிகமா? பல மாணவர்களுக்கு இந்த புதிய பாதையின் ஆரம்பமே இனிமையாக அமைவதில்லை அது ஒரு பயமூட்டும் அனுபவமாக மாறுகின்றது காரணம் பகிடிவதை வெளித்தோற்றத்தில் மகிழ்ச்சியான வரவேற்பாக காணப்பட்டாலும் இவை பலருக்கு அவமானம் மன உளைச்சல் மற்றும் வன்முறை போன்ற வடிவமாக மாறுகின்றது.பல்கலைக்கழக மாணவர்களுள் இது ஒரு பெரும் நோயாக வளர்ந்து வந்துள்ளது. சிரேஷ்ட மாணவர்கள் புதுமுகமாணவர்களை தங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக செய்யும் அவமானங்கள் அல்லது கட்டாயப்படுத்தும் செயல்கள் பல வடிவங்களில் மாணவர்கள் மத்தியில் காணப்படுகின்றன. வாய் வழியாக பகிடிவதை மேற்கொள்ளப்படுகிறது, அவமானப்படுத்தும் வகையிலான பேச்சுக்கள் கேலிச் சொற்களை உபயோகித்தல் அதேபோல உடல் ரீதியாகவும் பகிடிவதை செய்யப்படுகின்றன, ஒருவரை ஒருவர் அடித்தல் தள்ளுதல் போன்றன அதேபோல மனதளவில் பகிடிவதை மேற்கொள்ளப்படுகின்றன. மனதளவில் ஒருவரை காயப்படுத்துதல் தனிமைப்படுத்துதல் மிரட்டுதல் பயமுறுத்தல் போன்றவற்றை மேற்கொள்ளுகின்றனர்.அதேபோல தற்போதைய காலகட்டங்களில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி பகிடிவதைகள் மேற்கொள்ளப்படுகின்றது. சமூக ஊடகங்களில் புகைப்படங்கள்

தொடர்ச்சி▼

# பகிடிவதையற்ற பல்கலைக்கழகம்!

தொடர்ச்சி▲

வீடியோக்கள் போன்றவற்றை தவறாக பதிவேற்றம் செய்வேன் என மிரட்டுதல் போன்றவாறாக மாணவர்கள் மத்தியில் அச்சுறுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பெற்றோர்களின் கைகளில் இருந்து இதுவரை காலமும் வளர்ந்து வந்த பிள்ளைகள் வெளியே வரும் சந்தர்ப்பங்களில் அவர்கள் இது போன்ற இன்னல்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது. இவ்வாறாக சமூகமயப்படுத்தப்படாத மாணவர்களே மன அழுத்தம் தாங்க முடியாமல் தங்கள் உயிரை தாங்களே மாய்த்துக் கொள்ளும் எத்தனையோ சம்பவங்கள் இன்றுவரை நடைபெறுக் கொண்டுதான் உள்ளன.

முன்னைய காலங்களில் புதிதாக வரும் மாணவர்களுடன் பழகுவதற்காக சிறிய கேள்விகள் கேட்பது பாடல்களைப் பாட வைப்பது போன்றன மட்டும்தான் நடந்தன. இவை ஒரு அளவுக்கு மகிழ்ச்சியான கலந்துரையாடலாகவே இருந்தது. ஆனால் காலப்போக்கில் இவை அதிகப்படியான வன்முறையாக உருவெடுத்துள்ளது. சிரேஷ்ட மாணவர்கள் அவர்களின் அதிகாரத்தை வெளிப்படுத்தும் நோக்கில் புதுமுகமான வர்களை உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் துன்புறுத்துகின்றனர். இதனால் பல மாணவர்கள் தங்களின் கல்வி வாழ்க்கையை வெறுத்துவிட்டு பல்கலைக்கழகத்தை விட்டு விலகும் நிலையும் ஏற்படுகின்றன. பகிடிவதைக்கு ஆளான மாணவர்கள் அடிக்கடி பயம் குழப்பம் போன்ற மன நிலையை அனுபவிக்கின்றனர். அவமானம் தாழ்வு மனப்பாண்மை போன்றன அவர்களின் எதிர்கால வாழ்க்கையின் நம்பிக்கையை இழக்க செய்கின்றன. இவ்வாறான பகிடிவதைகள் வெறுமனே மாணவர்களின் பிரச்சினை மட்டும் அல்ல. இது குறித்த பல்கலைக்கழகங்களதும் மரியாதைக்கு கேடு விளைவிக்கும் ஒரு விடயமாகும் இவ்வாறான செயல்பாடுகளால் பல்கலைக்கழகங்கள் பாதுகாப்பற்ற இடங்கள் என பெயர் பெறுகின்றன. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அனுப்புவதற்கே பயப்படுகின்ற ஒரு சூழலை இச் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் உருவாக்கியுள்ளன. இவை எமது நாடுகளில் மட்டுமல்லாது உலகளாவிய ரீதியில் காணப்படுகிற ஒரு பிரச்சினையாகவே காணப்படுகிறது. பல நாடுகளில் பகிடிவதைக்கு எதிராகச் சட்டங்களும் கொண்டுவரப் பட்டுள்ளன. இலங்கையில் Anti – Anti Ragging Act No 20 of 1198 சட்டத்தின் கீழ் பகுதிக்கு 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனை எனும் சட்டம் ஒன்று காணப்படுகிறது.

பகிடி வதையைக் குறைப்பதற்கான நடவடிக்கையாக விழிப்புணர்வுகளை மேற்கொள்ளலாம். புதிய மாணவர்களுக்குப் பகிடிவதை சட்ட விரோதம் என்பதை விளக்க மாணவர்களுக்கு பகிடிவதை என்பது துன்புறுத்துவது அல்ல மாறாக அவை நட்பைப் பேணுவது என்று தெளிவுபடுத்தல் வேண்டும். அவ்வாறு பகிடிவதை ஏற்படில் அதனை இரகசியமாக முறைப்பாடு அளிக்கும் வகையிலான மையங்களை உருவாக்குதல் வேண்டும். மரியாதை, கருணை, சமூகப் பொறுப்பு ஆகிய வற்றை மாணவர்களிடையே வளர்க்க வேண்டும்.

நாம் நினைத்துப் பார்ப்போம் புதிய மாணவர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்படுகிறார்கள். சிரேஷ்ட மாணவர்கள் அவர்களுக்கு வழிகாட்டிகளாக மாறுகிறார்கள். கல்வி நிலையம் சிரிப்பும் சிந்தனையும் கலந்த இடமாகிறது. அதுவே உண்மையான “பல்கலைக்கழகச் சமூகம்”. பகிடிவதை இல்லாத சூழல் உருவாகும்போது, மாணவர்களின் திறமை வெளிப்படும். அவர்கள் நம்பிக்கையுடன் கல்வி கற்க முடியும். ஒருவருக்கொருவர் மரியாதை கொடுக்கும் பண்பும் வளர்கிறது. அதுவே நம் சமூகத்தின் நாகரிகத்தின் அடையாளம். பகிடிவதை என்பது ஒரு பழக்கம் அல்ல, ஒரு குற்றம். அது ஒரு மனிதனை உடைக்கும் செயல். கல்வி நிலையங்களில் அது இடம் பெறுவது நம்மை ஒரு சமூகமாக அவமானப்படுத்துகிறது. அதனால் ஒவ்வொரு மாணவரும் தம் மனதில் “நான் யாரையும் துன்புறுத்த மாட்டேன் யாரையும் பகிடிவதைக்குள்ளாக்க மாட்டேன்” என்று உறுதி கொள்ள வேண்டும். புதியவரை வரவேற்கும் கலாசாரம் பகிடிவதை அல்ல, மாறாக அன்பு, ஆதரவு, வழிகாட்டுதல் என்பதே அதற்குரிய அர்த்தம். பல்கலைக்கழகங்கள் புத்தகங்களின் வாசம் மட்டுமல்ல, மனிதத்தின் மணமும் வீசும் இடமாக மாற வேண்டும்.

## மாவீரர் தினம்...!

அன்று சென்ற பாதை
இன்று புல்லால் மூடப்பட்டிருந்தாலும்
அந்தப் புல்லின் நுனிகளில் கூட
உன் அடியொலி நின்றிருக்கிறது!

காற்று கூட
உன் பெயரை மெதுவாகச் சொல்லுகிறது
சத்தமாகச் சொன்னால்
அம்மாவின் இதயம் உடைந்து போகும் என்பதாலோ?

அந்த வீட்டுக் கதவு
இன்னும் முழுமையாக மூடப்படவில்லை
நிழல்கள் மட்டும் உள்ளும் வெளியும் நடக்கின்றன
நீ எப்போது திரும்புவாய் என
காலத்தின் கண்ணீர் கணக்குப் பார்க்கிறது.

வீடு
உன்னை இழந்ததல்ல
உன்னுடன் உயிர்போகும்
மௌனத்தைக் கற்றுக் கொண்டது.

தாய்
கைகளைக் கூப்பி வானத்தை நோக்கும் போது
அது பிரார்த்தனை இல்லை!
அது போகாத பாசத்தை
சற்று நிமிர்த்தி நிறுத்தும் நொடிதான்!

மண்ணில் விழுந்த மலர்
அழியாது...
மண்ணே மலராய் மாறும்
அதேபோல்
நீ இறந்துவிடவில்லை.
நம் உள்ளத்தின்
அமைதியான இடத்தில்
ஒரு உயிராகத்தான் நிற்கிறாய்!



**நடராசா கோபிராம்,**
**உளவியல் சிறப்புக்கலை மாணவன்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**



# தொலைபேசி ஊடான கடன்களால் புதிய ஆபத்து!

இலங்கையில் இன்றைய காலகட்ட வாழ்க்கையில் வேகமாக ஓடிக் கொண்டிருப்பவர்களுக்கு “ஒரே அழைப்பில் கடன்” என்ற வசதியான வாசகம் பலரின் தினசரி பொருளாதார சிக்கல்களுக்கு ஒரு விரைவான தீர்வாகத் தோன்றி வருகின்றது.

குறிப்பாக கடந்த சில ஆண்டுகளில் இலங்கையில் Mobile Application, WhatsApp, Messenger, SMS மற்றும் நேரடி அழைப்புகள் மூலம் வழங்கப்படும் உடனடி கடன்கள் மிக வேகமாகப் பரவியுள்ளன. சில விநாடிகளில் கிடைக்கும் இந்த தொலைபேசி வாயிலான கடன் வசதிகளானவை மக்களின் உடனடி நிதி தேவைகளை பூர்த்தி செய்யும் என்ற வெளிப்புற தோற்றம் கொண்டாலும், அதன் மறுபுறத்தில் எண்ணற்ற ஆபத்துகளை மறைத்து வைத்திருக்கிறன. குறிப்பாக இலங்கையில் வேலை வாய்ப்பு நிச்சயமின்மை, வாழ்க்கைச் செலவின் உயர்வு, பொருளாதார பதற்றம் போன்ற சூழ்நிலைகளில் இத்தகைய எளிமையான கடன்கள் பொதுமக்களை கடன் சுழற்சிக்குள் தள்ளுகின்றன. அத்துடன் இக்கடன்களை வழங்கும் பல நிறுவனங்கள் சட்டரீதியான கண்காணிப்பின்றி செயல்படுவதும், அதிக வட்டி வீதங்களும், தனிநபர் தகவல் திருட்டுக்களும் இலங்கை மக்களிடையே புதிய வகை சமூக மற்றும் நிதி நெருக்கடிகளை உருவாக்கி வருகின்றன. உடனடி நிவாரணம் எனத் தோன்றி மக்களை நம்ப வைக்கும் இக் கடன்கள் நீண்டகாலத்தில் தனி நபரின் வாழ்வை பாதிக்கும் ஆபத்தான வலையாக மாறி வருவது



இ.அபினகா,
மூன்றாம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

மிகவும் கவலைக்குரியது.

சமீப கால புள்ளிவிவரங்கள் இலங்கையில் இந்த மொபைல் கடன் செயலிகளின் (Apps) பயன்பாடு வியக்க வைக்கும் அளவில் அதிகரித்துள்ளதைக் காட்டுகின்றன. பொருளாதார நெருக்கடியாலும், சம்பளப் பற்றாக்குறையாலும், அத்தியாவசியத் தேவைகளுக்காகவும் தவிக்கும் மக்கள் வங்கிகளின் நீண்ட மற்றும் சிக்கலான நடைமுறைகளைத் தவிர்த்து இந்த எளிதானகடன் மூலமாக பணத்தை நோக்கி ஈர்க்கப்படுகிறார்கள். ஒரு சில உடஉைமள மூலம் ஒருவரது தனிப்பட்ட விவரங்கள் சென்றடைந்து பணம் உடனடியாக கைகளுக்கு வந்துவிடுகிறன. ஆனால் இந்த வேகமும் எளிமையும் தான் மனித வாழ்க்கையை இவ்வளவு அபாயகரமானதாக மாற்றியுள்ளது.

இந்தக் கடன் செயலிகள் ஒரு சாமர்த்தியமான நோக்கத்துடன் களமிறங்குகின்றன. முதலில் அவை மிகக் குறைந்த தொகைகளாக கிட்டத்தட்ட எந்த ஆவணமும் இல்லாமல் வழங்குகின்றன. ஒரு நபர் ரூபா 5,000 அல்லது ரூபா 10,000 போன்ற சிறிய தொகையை அவசரத் தேவைக்கு எடுக்கும் போது அதன் ஆபத்தைப் பற்றி யோசிப்பதில்லை. “இரண்டு வாரங்களில் திருப்பிச் செலுத்திவிடலாம்,” என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில் இந்தச் செயலிகள் பயன்படுத்தும் வட்டி வீதம் அதிர்ச்சியளிக்கக் கூடியது. சில சமயங்களில் இவை ஆண்டுக்கு 300 வீதம் முதல் 500 வீதம் வரையான வட்டி வீதங்களை மறைமுகமாகச் சுமத்துகின்றன.

உதாரணமாக, ஒரு நபர் ரூபா 10,000 கடனுக்கு ஒரு வாரத்தில் ரூபா 1,000 வட்டி மற்றும் செயலாக்கக் கட்டணமாக செலுத்த வேண்டியிருக்கும். இது ஏழு நாட்களுக்குப் பின்னரே கடனைத் திருப்பிச் செலுத்தும் நிலை வந்தால் கடன் தொகை வேகமாக இரட்டிப்பாகும் அபாயம் உள்ளது. பெரும்பாலான கடன்கள் 7 முதல் 30 நாள்களுக்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். குறித்த காலத்தினுள் பணத்தை செலுத்த முடியாவிட்டால் அபராதமாக மிகக் கடுமையாக கட்டும் பணத் தொகை அதிகரிக்கத் தொடங்குகிறது. ஒருமுறை தவணை தவறியவுடன், கடன் தொகை ஒரு பனிப்பந்து போல வேகமெடுத்து, அதைச் சமாளிக்க முடியாமல் கடன் வாங்கியவர் கஷ்டத்தால் திணறுகின்றனர்.

இலங்கையின் பாரம்பரிய நிதி நிறுவனங்கள் மத்திய வங்கியின் ஒழுங்குமுறைக்கு உட்பட்டு இயங்குகின்றன. ஆனால் இந்த டிஜிட்டல் கடன் நிறுவனங்களில் பல வெளி

தொடர்ச்சி ▼




# தொலைபேசி ஊடான கடன்களால் புதிய ஆபத்து!

தொடர்ச்சி▲

நாட்டு நிறுவனங்களாகவும், முறையான நிதிச் சட்டங்களுக்கு அப்பாற்பட்ட துறைகளாகவும் செயல்படுகின்றன. இதனால் மத்திய வங்கியின் கண்காணிப்பு இன்றி அவை தமது விருப்பத்திற்கு ஏற்ப வட்டி வீதங்களையும் மறைமுகக் கட்டணங்களையும் நிர்ணயிக்கின்றன. வாடிக்கையாளர் கடனுக்கு விண்ணப்பிக்கும்போதே செயலாக்கக் கட்டணம், ஜி.எஸ்.டி. (GST), சேவைக்கட்டணம் எனப் பல பெயர்களில் ஒரு பகுதி பணம் கழிக்கப்பட்டு விடுகிறது. உதாரணமாக, 10,000 ரூபா கடனுக்கு விண்ணப்பித்தால் கையில் கிடைப்பது 8,500 ரூபா மட்டுமே. ஆனால் வட்டியோ 10,000 ரூபா தொகைக்கே கணக்கிடப்படுகின்றது. இது ஒரு கண்ணுக்குத் தெரியாத கொள்ளை என்றே கூற முடியும். இதன் காரணமாக ஒரு கடனை அடைக்க முடியாமல் தவிக்கும் நபர், வேறு ஒரு புதிய செயலியில் கடன் வாங்கி பழைய கடனை அடைக்க முயல்கிறார். இந்தச் சக்கரத்தில் சிக்கியவர்கள் மீண்டு வருவது என்பது கிட்டத்தட்ட இயலாத காரியமாகி அவர்கள் ஒரு கடனாளியிலிருந்து, பல கடன்களுக்கு அடிமையாக மாறுகிறார்கள்.

இந்த மொபைல் கடன் செயலிகளின் மிகவும் ஆபத்தான அம்சம் என்னவென்றால் அவை கடன் வாங்கியவரின் தனிப்பட்ட உரிமைகளை மீறுவதாகும். அதாவது ஓர் கடனுக்கு விண்ணப்பிக்கும் போதே இந்த செயலிகள் உங்கள் தொலைபேசியில் உள்ள முக்கியமான தரவுகளை அணுகுவதற்கான அனுமதியைக் கேட்கின்றன. இதில் உங்கள் அழைப்புத் தொடர்புகள் (Contacts), படத்தொகுப்புகள் (Gallery) மற்றும் இருப்பிடத் தகவல் (Location) ஆகியவை அடங்கும். குறித்த கடனைத் திருப்பிச் செலுத்தத் தாமதம் ஏற்பட்டால் கடன் வாங்கியவரை மட்டுமல்லாமல் அவரது தொடர்புகளில் உள்ள நண்பர்கள், குடும்பத்தினர், சக ஊழியர்கள் எனப் பலருக்கும் நேரடியாக அழைப்பை ஏற்படுத்தி, "உங்கள் நண்பர் அல்லது உறவினர் பணத்தைத் திருப்பிச் செலுத்தவில்லை," என்று கூறி, பொதுவெளியில் அவமானப்படுத்துகின்றன.

இந்த அச்சுறுத்தலின் நோக்கம், கடன் வாங்கியவருக்கு மன உளைச்சலைக் கொடுத்து, எப்படியாவது பணத்தைக் கட்ட வைக்க வேண்டும் என்பதே ஆகும். இலங்கையின் ஒரு சில இடங்களில் பலர் இந்த அவமானம் தாங்காமல் தற்கொலைக்கு முயற்சி செய்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இது வெறுமனே நிதி நெருக்கடி மட்டுமல்ல. இது ஒரு மனநல நெருக்கடி, சமூகத்தின் கட்டமைப்பையே உலுக்கும் ஒரு ஆபத்தாக மாறியுள்ளது.

இன்றைய நிலையில், இலங்கையின் உழைக்கும் வர்க்கத்தில் கணிசமானோர் இந்த டிஜிட்டல் கடன் பொறிகளுக்குள் சிக்கித் தவிக்கின்றனர். இது அவர்களின் தனிப்பட்ட உற்பத்தித் திறனைப் பாதிப்பதோடு வேலை செய்யும் இடத்தில் கூடக் கடனை வசூலிப்பவர்களின் தொடர்ச்சியான அழைப்புகளாலும், மிரட்டல்களாலும் பெரிய சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனால் குடும்பங்களின் கணவன்- மனைவிக்கிடையே சண்டை, பிள்ளைகளின் கல்விக்கு பணம் செலுத்த முடியாமை, அடிப்படை உணவுத் தேவைகளுக்கே கடன் வாங்க வேண்டிய நிலை என இந்தப் பொறி பல குடும்பங்களை நடுத்தெருவில் நிறுத்தும் நிலைக்கே தள்ளியுள்ளது. வறுமை ஒழிப்பு மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை இலங்கை அரசு முன்னெடுக்கும் வேளையில் இந்தத் தொலைபேசி கடன்கள் எதிர் திசையில் செயல்பட்டு ஏற்கனவே நிலவும் பொருளாதாரச் சமத்துவமின்மையை மேலும் தீவிரப்படுத்துகின்றன.

இலங்கையில் இந்த மொபைல் கடன் செயலிகளை முறையாக ஒழுங்குபடுத்தும் ஒரு தெளிவான சட்டம் இதுவரை இல்லை என்பது தான் மிகப்பெரிய குறைபாடு. இந்தச் செயலிகள் வெளிநாடுகளில் இருந்து இயக்கப்படுவதால், அவற்றின் மீது சட்ட நடவடிக்கைகளை எடுப்பதும், பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணம் பெறுவதும் மிகவும் சவாலான காரியமாக உள்ளது. தொலைபேசி ஊடான உடனடிக் கடன்கள் ஒரு டிஜிட்டல் மயக்க மருந்து போல செயல்படுகின்றன. இது உங்கள் தற்காலிக வலியைப் போக்கலாம், ஆனால் நிரந்தரமான ஆழமான காயத்தை ஏற்படுத்தும். ஒரு நொடியில் கிடைக்கும் பணத்தின் பின்னால் மறைந்திருக்கும் நூற்றுக்கணக்கான சதவீத வட்டியைப் பற்றி ஒவ்வொருவரும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

சட்டபூர்வமான பாதுகாப்புக் கவசங்கள் உருவாக்கப்படும் வரை இலங்கையின் குடிமக்கள் அனைவரும் சுய பாதுகாப்புடன் இருக்க வேண்டும். 'எளிதாகக் கிடைக்கும் பணம்' எப்போதும் ஆபத்தானதே. எந்தவொரு கடன் செயலியையும் பயன்படுத்துவதற்கு முன்பும் அதன் வட்டி வீதம், கட்டணங்கள் மற்றும் தனிப்பட்ட தரவு அணுகல் குறித்த நிபந்தனைகளை ஒருமுறைக்கு நூறு முறை ஆராய்வது அவசியமாகும். ஸ்மார்ட்ஃபோன் என்பது உங்கள் வாழ்க்கைக்கான ஒரு கருவி. அது உங்கள் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் கருவியாக மாறிவிடக் கூடாது. எனவே டிஜிட்டல் கடன் பொறியிலிருந்து விலகி இருங்கள். இல்லையெனில் இது நமது சமூகத்தின் அமைதியையும், நிதி ஸ்திரத்தன்மையையும் மொத்தமாக விழுங்கிவிடும்.

# இண்டியா கூட்டணி வென்ற தொகுதிகளில் 50 ஆயிரம் வாக்காளர்களை நீக்கத் திட்டம்

## அகிலேஷ் குற்றச்சாட்டு



2024 தேர்தலில் இண்டியா கூட்டணி வென்ற தொகுதிகளில் 50 ஆயிரம் வாக்காளர்களை நீக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தரபிரதேச முன்னாள் முதல்வரும், சமாஜ்வாதி கட்சித் தலைவருமான அகிலேஷ் யாதவ் தெரிவித்துள்ளார்.

அகிலேஷ் யாதவ் லகய்னோவில் செய்தியாளர்களிடம் நேற்று கருத்து தெரிவிக்கையில்,

“நாடு முழுவதும் உ.பி. உள்ளிட்ட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப்பணிகள் (எஸ்.ஐ.ஆர்) நடைபெற்று வருகிறது. இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். கடந்த 2022 உத்தரபிரதேச சட்டப் பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. 255 இடங்களில் வெற்றி பெற்றது. ஆனால், 2024 மக்களவைத் தேர்தலில் அந்தக் கட்சியால் 162 பேரவைத் தொகுதிகளில் மட்டுமே முன்னிலை பெற முடிந்தது.

அதே நேரத்தில் 2022 தேர்தலில் 111 இடங்களில் சமாஜ்வாதி கட்சி வெற்றி பெற்றது. 2024 மக்களவைத் தேர்தலில் எங்கள் கட்சி 183 இடங்களில் அதிகப்படியான வாக்குகளைப் பெற முடிந்தது.

2022 ஆம் ஆண்டு தேர்தலில் 2 இடங்களில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சி, மக்களவைத் தேர்தலில் 40 பேரவைத் தொகுதிகளில் அதிக வாக்குகளைப் பெற முடிந்தது. இதன்மூலம் இந்த எஸ்.ஐ.ஆர். பணிகளைக் கொண்டு சதித்திட்டத்தை பா.ஜ.க. செயலாற்ற முனைகிறது.

கடந்த தேர்தலில் காங்கிரஸ், சமாஜ்வாதி கட்சிகள் வெற்றி பெற்ற அல்லது முன்னிலையில் இருந்த தொகுதிகளில் இருந்து தலா 50 ஆயிரம் வாக்குகளை நீக்க பா.ஜ.கவும், தேர்தல் ஆணையமும் திட்டமிடுகின்றன. எனவே, நமது கட்சி நிர்வாகிகள் விழிப்புடன் பணியாற்றி நமது வாக்காளர்கள் பெயர்களை விடுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எந்தவித முறைகேடுக்கும் நாம் இடம் கொடுக்கக்கூடாது.” என்று தெரிவித்தார்.

# ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்தக் கோரி அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பேரணி

பழைய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்தக் கோரி சி.பி.எஸ் ஒழிப்பு இயக்கம் சார்பில் சென்னையில் நடைபெற்ற பேரணியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் – ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை (சி.பி.எஸ்) ரத்துசெய்து, மீண்டும் பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற ஒரே கோரிக்கையை வலியுறுத்தி சி.பி.எஸ் ஒழிப்பு இயக்கம் தொடர்ந்து போராடி வருகிறது.

இந்நிலையில், இக்கோரிக்கையை நிறைவேற்றக் கோரி, ‘கோட்டை நோக்கி பேரணி’ நேற்று நடைபெற்றது. எழும்பூர் எல்ஜி கார்டன் சாலை சந்திப்பில் தொடங்கி பேரணி தெற்கு கூவம் வீதி வழியாக ராஜரத்தினம் விளையாட்டரங்கை சென்றடைந்தது.




சி.பி.எஸ். ஒழிப்பு இயக்கத்தின் மாநில தலைமை ஒருங்கிணைப்பாளர் மு.செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணியை தமிழ்நாடு அரசு ஊழிய சங்க மாநில தலைவர் எஸ்.ரமேஷ் தொடங்கிவைத்தார். இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் – ஆசிரியர்கள் கோரிக்கை பதாகைகளுடன் பங்கேற்றனர்.

# உத்தரகாண்ட் ஜான்சர்-பவார் பழங்குடிப் பகுதியில் மது, துரித உணவுகளுக்குத் தடை விதிக்கப்பட்டது

இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலத்தின் ஜான்சர்–பவார் பழங்குடி பகுதியிலுள்ள 25 கிராமங்களில், மது மற்றும் துரித உணவுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், கிராம சபைக் கூட்டங்களில் ஒருமித்த தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறிப்பாகத் திருமண விழாக்கள் மற்றும் பிற நிகழ்ச்சிகளில் பீட்சா, பாஸ்தா போன்றவற்றை விருந்தினர்களுக்கு வழங்கினால் 1 லட்சம் இந்திய ரூபா அபராதம் விதிக்க வேண்டியிருக்கும் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அத்துடன், திருமணங்களில் விலையுயர்ந்த பரிசுகள், வெள்ளி நாணயங்கள், உலர் பழங்கள் போன்றவற்றைப் பரிமாறிக் கொள்வதைத் தடை செய்து, அதற்குப் பதிலாகப் பாரம்பரிய தானியங்கள் மற்றும் உணவுகளை மட்டுமே பரிமாறிக்கொள்ள வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இனி வரும் சமுதாய கொண்டாட்டங்கள் பாரம்பரிய உணவு முறைகள் மற்றும் கலாசார நடைமுறைகளுக்குத் திரும்புவதை உறுதி செய்வதே இதன் முதன்மை நோக்கம் என தெரிவிக்கப்படுகின்றது.

அபராதத்துடன், விதிகளை மீறும் குடும்பங்களின் நிகழ்ச்சிகளில் கிராம மக்கள் யாரும் பங்கேற்க மாட்டார்கள் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# அணுகுண்டு தாக்குதலைத் தாங்கும் செயற்கைத் தீவை உருவாக்கும் சீனா

அணுகுண்டு வெடிப்புகளைத் தாங்கும் திறன் கொண்ட, 78,000 தொன் எடையுள்ள பிரம்மாண்டமான செயற்கைத் தீவு ஒன்றை சீனா உருவாக்கி வருகிறது.

அதிகாரப்பூர்வமாக ‘ஆழ்கடல் அனைத்து காலநிலை வசிப்பிட மிதக்கும் ஆராய்ச்சிக் கூடம்’ என்று அழைக்கப்படும் இந்த மிதக்கும் அமைப்பு, சீனாவின் “தொலைதூரக் கடலுக்கான நகரும் தீவு” என்று வர்ணிக்கப்படுகிறது.

இது வெளிப்புற உதவிகளை பெறாமல், 4 மாதங்கள் வரை 238 பணியாளர்களை தாங்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த வசதிக்கு தலைமை தாங்கும் கல்வியாளர் லின் ஜோங்சின் , “நாங்கள் வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்தை முடித்து, 2028 ஆம் ஆண்டுக்குள் செயல்பாட்டிற்குக் கொண்டு வரத் தீவிரமாகச் செயல்படுகிறோம்” என்று தெரிவித்துள்ளார்.

விஞ்ஞானிகள் இந்த அமைப்பில் “மெட்டாமீட்டீரியல்” செண்ட்விச் படலங்களை பயன்படுத்துகிறார்கள்.

இவை “பேரழிவு தரும் அதிர்ச்சிகளை மென்மையான அழுத்தங்களாக” மாற்றும் திறன் கொண்டவை என சவுத் சீனா மோர்னிங் போஸ்ட் தெரிவித்துள்ளது.

ஷாங்காய் ஜியாவோ டோங் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் யாங் டிகிங் தலைமையிலான குழு, “இதன் மேல் கட்டமைப்பில் அவசரகால மின்சாரம், தகவல் தொடர்பு மற்றும் வழிசெலுத்தல் கட்டுப்பாடு ஆகியவற்றை உறுதி செய்யும் முக்கியமான அறைகள் உள்ளன என்றும் இந்த இடங்களுக்கு அணுகுண்டு வெடிப்பு பாதுகாப்பு மிகவும் இன்றியமையாதது என்று கூறியுள்ளது.

சீனா இதனை விஞ்ஞான உள்கட்டமைப்பு என்று விபரித்தாலும், இதன் வடிவமைப்பு அணு ஆயுதத் தாக்குதலின் மிக மோசமான சூழ்நிலையையும் இந்த அமைப்பினால் சமாளிக்க முடியும் எனவும் சீன விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றன.

# வளர்ப்பு நாயால் தாக்கப்பட்டு 2 வயதுக் குழந்தை உயிரிழப்பு

## பெற்றோர் கைது



அமெரிக்காவின் ஒக்லஹோமா பகுதியில் தமது குடும்பத்தினரால் வளர்க்கப்பட்ட நான்கு நாய்களில் ஒன்றினால் தாக்கப்பட்டதில் 2 வயதுடைய பெண் குழந்தையொன்று உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஒக்லஹோமா நகர பொலிஸ் திணைக்களத்துக்கு வந்த அழைப்புக்கமைய, சம்பவ இடத்துக்கு சென்ற அதிகாரிகளால், நாய் ஒன்றினால் கொடூரமாகத் தாக்கப்பட்ட லொக்லின் மெக்வயர் என்ற 2 வயது குழந்தை உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸின் சிறுவர்கள் மீதான குற்றப்பிரிவின் மேற்கொண்ட விசாரணையில், குழந்தை அந்த நாயுடன் ஒரு அறையில் குறிப்பிடத்தக்க காலத்திற்கு அலட்சியமாக விடப்பட்டிருந்த பின்னரே அவர் இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவந்தது.

இந்த விசாரணைகளின் அடிப்படையில், குழந்தையின் தாயும் தந்தையும் கொலைக் குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இந்தநிலையில், மூன்றாவது பிறந்த நாளுக்கு சில வாரங்களுக்கு முன்பு உயிரிழந்த குழந்தையின் சடலம், இறுதி சடங்குகளுக்காக அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஊட்டச்சத்து பற்றாக்குறை காரணமாக சூடானில் 23 குழந்தைகள் உயிரிழப்பு

சூடானில் ஊட்டச்சத்து பற்றாக்குறை காரணமாக 23 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சூடான் மத்திய கோர்டோஃபான் பகுதியில் இவ்வாறு குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படு படுகின்றது.

கடந்த ஒரு மாதத்துக்குள் ஊட்டச் சத்து பற்றாக்குறை காரணமாக இவ்வாறு குழந்தைகள் உயிரிழந் துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் வெளியான அறிக் கையில், "டோஃபான் பகுதியில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 23 குழந்தைகள் ஊட்டச்சத்து பற்றாக்குறை தொடர்பான பாதிப்புகளால் உயிரிழந்தன.



இந்தப் பகுதியில் இராணுவத்துக்கும் ஆர்.எஸ்.எஃப் துணை இராணுவப் படைக்கும் இடையே கடும் மோதல் நடைபெற்று வருகின்றது.

இதனால் மனிதாபிமான நிலைமை மோசமடைந்துள்ளது" என தெரிவிக் கப்பட்டுள்ளது.



பக்கங்கள் - 03

# கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 23/11/2025

## தீ விபத்தில் சிக்கி இருவர் உயிரிழப்பு



C3



# தாமதமாகும் காசா மாணவர்களின் கனவு இஸ்ரேல் மீது கனடா அரசு குற்றச்சாட்டு

காசா பகுதிக்கு, கல்வி கற்க உதவி செய்ய வேறு சில நாடுகள் வெற்றிகரமாகச் செயல்பட்டாலும், சுமார் 130 இற்கும் மேற்பட்ட காசா மாணவர்களுக்கு விசா வழங்குவதில் ஏற்படும் தாமதத்திற்குக் காரணம் இஸ்ரேலிய அதிகாரிகளே என்று கனடா குற்றம் சாட்டியுள்ளது.

போரினால் காசாவில் தனது படிப்பைத் தொடர முடியாத நிலையில், சோண்டோஸ் என்ற மாணவி கனடாவின் வாட்டர்லூ பல்கலைக் கழகத்தில் முதுகலை நிர்வாகப் படிப்பிற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முயற்சித்தார்.

விண்ணப்பிப்பதற்கு நிலையான இணைய இணைப்பைத் தேடி, காசா நகரில் பல கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்று, ஒரு மணல் தெருவில் வலிமையான 'வை பை' கிடைத்த இடத்தைக் கண்டுபிடித்தார்.

அவர் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த அன்றே, அங்கிருந்து கிளம்பும் நேரத்தில், இணையத்தைப்பயன்படுத்திக்கொண்டிருந்தமக்கள்கூட்டத்தின் மீது இஸ்ரேலியத் தாக்குதல்

C2

# கனடாவில் நீண்ட காலமாக தேடப்பட்ட குற்றவாளி கைது

கனடாவில் மிகவும் தேடப்பட்டு வந்த குற்றவாளிகளில் ஒருவரான நிக்கோலஸ் சிங், டொராண்டோ பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொள்ளை மற்றும் துப்பாக்கி சம் பந்தப்பட்ட குற்றங்களுக்காக 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த இவர், கடந்த ஆண்டு சட்டவிரோதமாகத் தப்பியோடித் தலைமறைவாக இருந்து வந்தார்.

இவர், கனடாவின் மிகவும் தேடப்படும் நபர்கள் பட்டியலில், கடந்த ஒக்டோபரில் வெளியிடப்பட்ட டீழுடுழு (ஞ ழுகு வாந டழுழமழுரவு) திட்டத்தின் முதல் 25 பட்டியலில் 15 ஆவது இடத்திலிருந்தார்.



கதற்கமைய டொராண்டோவில் வைத்து பொலிஸ் இவரைக் கைது செய்துள்ளது.

அத்துடன், இந்த நபரிடமிருந்து துப்பாக்கியொன்றும், தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் இவர் மீது, தடை செய்யப்பட்ட அல்லது உரிமம் பெறாத துப்பாக்கியை வைத்திருத்தல், மற்றும் துப்பாக்கியுடன் மோட்டார் வாகனத்தில் பயணித்தல் உட்பட ஆறு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கனடாவில் வாழும் புலம்பெயர்ந்தோர் மீது அமெரிக்க துணை ஜனாதிபதி குற்றச்சாட்டு

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கனடாவை குறை கூறி வருவதைத் தொடர்ந்து, தற்போது அமெரிக்க துணை ஜனாதிபதியும் குறை கூறத் துவங்கியுள்ளார்.

கனேடியர்களின் வாழ்க்கத்தரம் முன்னேறாமல் இருப்பதற்கு புலம்பெயர்ந்தோர்தான் காரணம் என அவர் கூறியுள்ளார்.

சமூக ஊடகமான எக்ஸில் கனடாவுக்கு எதிராக பல பதிவுகளை வெளியிட்டுள்ளார் அமெரிக்க துணை ஜனாதிபதியான ஜே.டி. வேன்ஸ்.

அவற்றில், கனேடிய மக்களின் வாழ்க்கைத்தரத்தின் தேக்கநிலைக்கு, அதாவது, வாழ்க்கைத்தரம் மேம்படாமல் இருப்பதற்கு, வெளிநாட்டில் பிறந்தவர்கள் கனடாவில் வாழ்வதுதான் காரணம் என வேன்ஸ் தெரிவித்துள்ளார்.

அதற்கு ஆதாரமாக, கனடாவின் தனி நபருக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி, அதாவது, GDP அல்லது Gross Domestic Product அறிக்கையை காட்டியுள்ளார் வேன்ஸ்.

ஆனால், ஒரு நபருக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி மட்டுமேதான் ஒரு நாட்டின் வாக்கைத்தரத்தை தீர்மானிக்கிறதா என கேள்வி எழுப்பியுள்ளன ஊடகங்கள்.

கனேடிய நண்பர்களே, உங்கள் நாட்டு அரசியல் அமெரிக்க அரசியல் மீதே விடாப்பிடியாக கவனம் செலுத்தி வருகிறது.

ஆனால், உங்கள் ஊடகங்கள் கூறுவதுபோல, உங்கள் வாழ்க்கைத் தரம் முன்னேற்றமடையாமல் இருப்பதற்குக் காரணம் ட்ரம்ப் அல்ல, நீங்கள் தேர்ந்தெடுத்த உங்கள் தலைவர்களே அதற்குக் காரணம் என்றும் கூறியுள்ளார் வேன்ஸ்.

ஏற்கனவே கனடா புலம்பெயர்தலுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுத்து வரும் நிலையில், எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல, தன் பங்குக்கு புலம்பெயர்ந்தோரைக் குறி வைத்துத் தாக்கியுள்ளார் வேன்ஸ்.

---

**தாமதமாகும்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடந்தது. "நான் ஓடத் தொடங்கி தரையில் விழுந்தேன் சிதறிய குண்டுகளின் துண்டுகளும் இரத்தமும் எங்கும் இருந்தன" என்று சோண்டோஸ், பிபிசியிடம் நினைவு கூர்ந்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி, பல்கலைக்கழகத்தின் உலகளாவிய நிர்வாகத்திற்கான முதுகலைத் திட்டத்தில் தனக்கு அனுமதி கிடைத்த செய்தியை சோண்டோஸ் பெற்றார். "நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். என் பொருட்டு போர் தனது ஆயுதங்களைக் கீழே வைத்தது போல உணர்ந்தேன். என்னுடைய இதயம் மீண்டும் ஒளியால் பிரகாசித்தது," என்று குண்டு வெடிப்புகளால் ஒளியூட்டப்பட்ட வானம் தனக்கு வேறு வகையான ஒளியைத் தந்ததாக அவர் உணர்வுபூர்வமாகக் கூறினார்.

சோண்டோஸ் ஒரு மனித உரிமை சட்டத்தரணியாக, உலக அரங்கில் பாலஸ்தீன மக்களுக்குப் பிரதிநிதியாக வேண்டும் என்று கனவு காண்கிறார். போர் அவரது பல்கலைக்கழகத்தை அழித்த பிறகு, வெளிநாட்டில் படிக்கும் வாய்ப்பு அவருக்கு ஒரு அரிய நம்பிக்கையை அளித்தது.

எவ்வாறாயினும், வாட்டர்லூ பல்கலைக்கழகத்தில் சேர்க்கை பெற்ற சோண்டோஸ் உள்ளிட்ட சுமார் 130 இற்கும் மேற்பட்ட காசா மாணவர்கள், கனடாவுக்கான விசாவுக்காக இன்னும் காத்திருக்கிறார்கள். அவர்களால் காசாவில் இருந்து வெளியேற முடியவில்லை என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கனடாவின் இலாப நோக்கற்ற அமைப்பான 'ஆபத்தில் உள்ள பாலஸ்தீன மாணவர்கள் மற்றும் அறிஞர்கள்' மூலம் பல மாணவர்கள் உதவி கோரியுள்ளனர்.

ஆனால் சிலருக்கு, இந்த காத்திருப்பு துயரமாக முடிந்தது. வாட்டர்லூ பல்கலைக்கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இரட்டைச் சகோதரிகளான தாலியா மற்றும் சாலி ஆகியோர், 2024 டிசம்பர் 5 ஆம் திகதியன்று இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டதாகப் பல்கலைக்கழகம் உறுதி செய்துள்ளது.

எவ்வாறாயினும், மாணவர்களுக்காக ஒட்டாவாவில் வாதாடி வரும் பேராசிரியர் நதியா அபு-சஹ்ரா, உயிரியல் அளவீடுகள் மற்றும் பின்னணிச் சரிபார்ப்புகள், காசாவிலிருந்து வெளியேற்றுவதில் உள்ள சிரமங்கள் ஆகியவையே தாமதத்திற்குக் காரணம் என கனடாவின் அதிகாரிகள் கூறுவதைச் சாக்குப் போக்குகள் என்று மறுக்கிறார்.

"மாணவர்களுக்கு உதவ இந்தக் கட்டமைப்புத் தடைகளை மற்ற நாடுகள் ஏற்கனவே நீக்கிவிட்டன. எனவே கனடாவின் நிலைப்பாடு நியாயப்படுத்த முடியாததாகிறது" என்று அவர் கூறுகிறார்.

பிரித்தானியா, இத்தாலி, அயர்லாந்து மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகள் ஏற்கனவே காசா மாணவர்களை வெளியேற்றி, வெளிநாட்டில் தங்கள் படிப்பைத் தொடர வழிவகை செய்துள்ளதாக அவர் தெரிவிக்கின்றார்.

# தீ விபத்தில் சிக்கி இருவர் உயிரிழப்பு

கனடாவின் பிராம்ப்டனில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

குழந்தை உட்பட நால்வர் தீவிர காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பானாஸ் வே பகுதியில், மெக்லாகிலின் வீதி மற்றும் ரிமெம்பரன்ஸ் வீதி அருகில் உள்ள வீட்டில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த அனைவரும் தற்போது தீவிர சிகிச்சையில் உள்ளனர் என்று பிராம்ப்டன் தீயணைப்பு துறைத் தலைவர் ஆண்டி கிளின் தெரிவித்துள்ளார்.



உயிரிழந்த ஒருவரின் சடலம் வீட்டிற்கு உள்ளே கண்டுபிடிக்கப்பட்டதாகவும், மற்றவரின் சடலம் வீட்டுக்கு வெளியே கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த தீயில் அயல் வீடுகளும் சேதம் அடைந்துள்ளன. இருந்தாலும் அங்கிருந்தவர்கள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.




# டொராண்டோ விமான நிலையத்தில் பல வாகனங்கள் மோதி பாரிய விபத்து

டொராண்டோவின் பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை பல வாகனங்கள் மோதியதில் பாதசாரிகள் பலர் காயமடைந்தனர்.

ஒரு சாரதிக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மருத்துவ அவசரநிலை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிகாலை 7 மணிக்கு சில நிமிடங்களுக்கு முன் டெர்மினல் 3 முன்பகுதியில் ஏற்பட்ட இந்த விபத்தில் ஆறு வாகனங்கள் மோதிக் கொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் ஐந்து பாதசாரிகள் மோதி காயமடைந்துள்ளனர். அவர்களுக்கான காயங்கள் லேசானவையே என்று கூறப்பட்டுள்ளது. காயமடைந்தவர்களில் மூவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

சம்பவத்தில் தொடர்புடைய எல்லா சாரதிகளும் இடத்திலேயே இருந்தனர் என்று பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

விபத்து நடந்த இடத்தில் பல நோயாளர் காவு வண்டிகள் , தீயணைப்பு வண்டிகள் மற்றும் பொலிஸ் வாகனங்கள் விரைந்து சென்றன.

பியர்சன் விமான நிலையம் வெளியிட்ட அறிவிப்பில், இந்த விபத்து விமான நிலையச் செயல்பாடுகளுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்று கூறியுள்ளது.